# தொண்டா ஜனாதிபதியை சனியன்று சந்திப்பார்
# "பிரார்த்தனை"யை நிறுத்த அரசு தீவிர முயற்சி!

(கொழும்பு)

நாளை வெள்ளிக்கிழமை இரவு கொழும்பு திரும்பும் அமைச்சர் தொண்டமான் சனிக்கிழமை காலை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்துப் பேசுவார். இச்சந்திப்புக்கான ஒழுங்கை இ. தொ. கா. பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி செய்துள்ளார். எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவிருக்கும் தோட்டத் தொழிலாளர்களின் பிரார்த்தனை இயக்கம் தொடர்பாக அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் 'கெடுபிடி' நடவடிக்கைகள் தொடர்பாகவே அமைச்சர் கொழும்பு திரும்பியதும் ஜனாதிபதியைச் சந்திக்க ஏற்பாடாகியுள்ளது. பிரார்த்தனையில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு அரைநாள் சம்பளம் வழங்கப்படுமானால், முழுநாள் பிரார்த்தனையில் தொழிலாளர் ஈடுபடுவர் என்று இ. தொ. கா. ஏற்கனவே அறிவித்துள்ளது தெரிந்ததே. நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்திலும் இது தொடர்பாக ஆராயப்பட்டது இதுபற்றி அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் கருத்து வெளியிடுகையில், "அமைச்சர் தொண்டமான் ஒரு கனவான். தனது கருத்துக்களை எப்போதும் பகிரங்கமாகவே தெரிவிப்பவர்" என்று குறிப்பிட்டார்.

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 9 - 1 - 86 வியாழன் (மார்கழி 25 ரபியு ஆகிர் 27) முழக்கம் 835

★ "தேயிலையில் சைனட் நஞ்சு கலக்கப்பட்டது உண்மை; வெறும் வெருட்டல்ல"

# ராணுவம் வாபஸாகாவிடின்
# ஏற்றுமதி அழிவுகள் தொடரும்

## தமிழீழ ராணுவம் எச்சரிக்கை!

இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் தேயிலையில் பொட்டாசியம் சைனட் நஞ்சு கலக்கப்பட்டதென்ற தங்கள் அறிவிப்பு வெறும் வெருட்டல்ல என்றும், இது முழுக்க முழுக்க உண்மையே என்றும், இதன் தாக்கத்தை இலங்கை வெகு விரைவில் அறிந்து கொள்ளுமென்றும் தமிழீழ இராணுவம் அரசாங்கத்திற்கு இரண்டாவது தடவையாக எச்சரிக்கை செய்துள்ளது.

தமிழர்களின் பாரம்பரிய மண்ணிலிருந்து, ராணுவத்தை வாபஸ்பெற அரசாங்கம் தயங்குமானால், இலங்கையின் மற்றைய ஏற்றுமதிப் பொருட்கள் மீதான பொருளாதார அழிவு வேலைகளையும் தாம் மேற்கொள்ளவிருப்பதாக தமிழீழ ராணுவம் மேலும் தெரிவித்துள்ளது.

தேயிலையில் நஞ்சு கலக்கப்பட்டதான தகவலை எந்த நாடாவது அறிய விரும்புமானால், சில தேயிலைப் பெட்டிகளின் இலக்கங்களைத் தங்களால் அறிவிக்க முடியுமென்றும், மிக அவசியமெனக் கருதினால் மட்டுமே இதனை அறிவிக்க வேண்டிவருமெனவும் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் முகாமிட்டிருக்கும் சர்வதேச ஸியோனிஸ பயங்கரவாதிகளான இஸ்ரேலின் மொசாட், ஷின்பாத், மற்றும் பிரிட்டிஷ் நாடுகளிட

—6-ஆம் பக்கம் பார்க்க

### யாழ். மாவட்ட இணைப்பதிகாரி

யாழ். மாவட்ட புதிய இராணுவ இணைப்பதி

...6ஆம் பக்கம் பார்க்க

## தேயிலை ஏற்றுமதியில் வீழ்ச்சி!
### ஆஸி, அமெரிக்கா, பிரிட்டன் நிறுத்தம்!!

இலங்கையின் தேயிலை ஏற்றுமதி கடந்த மூன்று நாட்களில் பெரும் வீழ்ச்சி கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேயிலையில் நஞ்சு கலக்கப்பட்டிருப்பதாக தமிழீழ ராணுவம் இருவாரங்களுக்கு முன்னர் விடுத்த எச்சரிக்கையே இதற்குக் காரணமாகும்.

அவுஸ்திரேலிய பிரபல்யமான தேசிய இறக்குமதி நிறுவனமொன்று கடந்த திங்கட்கிழமை முதல் இலங்கைத் தேயிலை கொள்வனவை நிறுத்தியுள்ளது.

பிரிட்டனும் தேயிலை கொள்வனவை மறு அறிவித்தல் வரை நிறுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா இங்குள்ள தனது நாட்டின் தேயிலை கொள்வனவு நிறுவனங்களுக்கு அனுப்பியுள்ள உத்தரவில், அடுத்த அறிவித்தல் வரை தேயிலை கொள்வனவை நிறுத்தி வைக்குமாறு கேட்டுள்ளது.

அதேவேளை தோட்டத் தொழில் அமைச்சர் மொன்

—6-ஆம் பக்கம் பார்க்க

### ஐ. ஜி. பி. யாழ். விஜயம்

பொலிஸ்மா அதிபர் திரு. சிறில் ஹேரத் நேற்று முந்தி

—6-ம் பக்கம் பார்க்க

## பார்த்தசாரதி, பண்டாரி
## தொண்டா தனித்தனி பேச்சு

(புதுடில்லி)

அமைச்சர் தொண்டமான் புதுடில்லியில் பாரத வெளியுறவுக் கொள்கைக் குழுத் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதியையும், வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரியையும் தனித்தனியாகச் சந்தித்துப் பேசினார்.

திரு பார்த்தசாரதி, அமைச்சருக்கு விருந்தளித்துக் கௌரவித்தார்.

இலங்கையிலுள்ள நான்கு லட்சம் வம்சாவழியினருக்கும் பிரஜாவுரிமை பெற்றுக் கொடுக்கும் விடயத்தில் பார

...6ம் பக்கம் பார்க்க

### இஸ்ரேலிலிருந்து படையினர் திரும்பினர்

இஸ்ரேலில் சிகிச்சை பெற்ற இரண்டாவது தொகுதிப் பாது

...6 ம் பக்கம் பார்க்க

### யாழ். ஆஸ்பத்திரியில்
## மூளைக்காய்ச்சல் குழந்தை மரணம்; 9 சிறுவர் அனுமதி

(வண்ணார்பண்ணை)

மூளைக்காச்சல் நோய் குடாநாட்டில் அதிவேகமாக பரவி வருகின்றது. இந்நோய் காரணமாக நேற்றுமுன்தினம் இரவு வஜுலாதேவி (5) என்ற மண்டைதீவைச் சேர்ந்த குழந்தை யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானது.

இந்நோய் காரணமாக கடந்தவாரம் பன்னிருவர் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இப்போது சிகிச்சைபெற்று வருகின்றனர். மேலும் இவ்

—6ஆம் பக்கம் பார்க்க

### இலங்கை இனப் பிரச்சினை:
## ராஜீவ் விதித்தநிபந்தனைக்கு ஆளுநர் குரானா பாராட்டு

(சென்னை)

"இந்தியா வந்திருக்கும் தமிழ் அகதிகள் அங்கு திரும்பிச்சென்றுவாழும் சுமுகமான நிலை ஏற்படாத வரை இலங்கையில் உள்ள இந்தியக் குடியுரிமை பெறத் தகுதியுள்ளவர்களை இந்தியா ஏற்காது என பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கூறிய கருத்தை தமிழ்நாடு அரசு வரவேற்கிறது."

இவ்வாறு தமிழ்நாடு ஆளுநர் திரு. எஸ். எல். குரானா நேற்று தமிழ்நாடு சட்டசபை-சட்ட மேலவை கலப்புக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

## வல்வைக்கு வரும் அகதிகள் தொகை தினமும் அதிகரிப்பு

(வல்வெட்டித்துறை)

திருமலை, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவுப் பகுதிகளிலிருந்து வல்வெட்டித்துறைப் பகுதிக்கு அகதிகளாக வருபவர்களின் தொகை அதிகரித்து வருவது பற்றியும் அதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் நேற்று முன்தினம் நடைபெற்ற வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவின் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், கள்ளக் கடத்தல் சம்பந்தமாக கைது செய்யப்

—6ஆம் பக்கம் பார்க்க

### யாழ். மாநகராட்சிமன்றத்துக்கு
## கோட்டை முகாமை அண்டியபகுதி மரங்களை உடன் வெட்டுமாறு இராணுவம் உத்தரவு!

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவமுகாமை அண்டிய பகுதியிலுள்ள சகல பெரிய மரங்களையும் உடனடியாக வெட்டிவிட வேண்டுமென இராணுவத்தினர் யாழ். மாநகரசபைக்கு அவசர உத்தரவு பிறப்பித்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

யாழ். பொதுஜன நூலகத்திற்கு முன்பாகவுள்ள வீதியிலும், மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து கே. கே. எஸ் சந்தி வரையிலுமுள்ள வைத்திலிங்கம் துரைச்சாமி வீதியிலுமுள்ள சகல மரங்களையுமே உடன்வெட்ட வேண்டுமென இராணுவம் உத்தரவிட்டுள்ளது.

உடனடியாகவே இதனைச் செய்யாவிட்டால் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்குத் தாம் பொறுப்பல்ல என யாழ் மாநகரசபை ஆணையாளருக்கு இராணுவம் எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

விற்பனையிலும் வாசகர் தொகையிலும் முன்னணியில் ஈழமுரசு

## பரிவிளம்பரம்

### தவறிவிட்டது

1-1-86 அன்று 642022016V என்னும் இலக்கமுடைய சி. நமசிவமார் என்பவரது அடையாள அட்டை மாவடி சந்திக்கும் சித்தங்கேணி சந்திக்கும் இடையில் (டச் ஒழுங்கை உட்பட) தவறிவிட்டது. கண்டெடுப்போர் தயது செய்து சென். ஜோன்ஸ் கல்லூரி அலுவலகத்தில் ஒப்படைக்கவும். R/15289

## நோயாளர் சிரமம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை ஊழியர் நலன் புரிச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வந்த சிற்றுண்டிச்சாலை மூடப்பட்டிருப்பதால் நோயாளிகள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் இராணுவ கூட்டு முகாமுக்கு அருகில் இவ்வைத்தியசாலை அமைந்திருப்பதால், கால்மைல் சுற்றளவில் ஒரு சிற்றுண்டிச்சாலையும் இல்லை. இதனால் நோயாளிகள் சுடுநீர் பெற்றுக்கொள்வதற்குகூட சிரமப்படுகின்றனர்.

வருடாந்த குத்தகை அடிப்படையில் கொடுக்கப்பட்டு வந்த இச்சிற்றுண்டிச்சாலை கடந்த 31ம் திகதியுடன் குத்தகை முடிவடைந்ததால் மூடப்பட்டது. ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் நிர்வாக சீர்கேடு காரணத்தினால் இது சம்பந்தமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமலுள்ளது.

## இடமாற்றம்

(சுழிபுரம்)

சம்பாந்துறை தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளர் திரு. எஸ். எட்மன் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரிக்கு இம்மாதம் முதல் இடமாற்றப்பட்டுள்ளார்.

## கமக்காரர் பார்வைக்கு...

(உடுவில்)

விவசாயிகளின் நன்மைகருதி உடுவில் கமநலச்சேவைநிலையத்திலும், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் காரியாலயங்களிலும் விவசாய காணிகள் பதிவு இடாப்பு இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் இம்மாதம் முப்பதொராம் திகதி வரை கமக்காரர் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

புதிதாகக் காணிகளை பதிவு செய்ய விருப்பவர்களையும், ஏற்கனவே பதவு செய்துள்ள காணிகளில் மாற்றம் செய்பவர்களையும் உடனடியாக தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு விவசாயப் போதனாசிரியர் கேட்டுக் கொண்டுள்ளார்.


**AL 87**

தூயபிரயோககணிதம்

சனி, ஞாயிறு வகுப்பு

7-15: தொடர்பு வேகம்
8-30: நுண்கணிதம்

ஆரம்பம்: **11-1-86**

ஆசிரியர்: ரவிமோகன்
யாழ்ப்பாணம்.

(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்) R/15277


★ ஒரு கடிதம்

## பெறுபேறு கிடைக்காத ஆசிரியர்களின் நிலை

ஐயா,

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பரீட்சை முடிவுகளைப் பற்றி தங்கள் பத்திரிகையில் டிசம்பர் 16ம், 21ம், 28ம் திகதிகளில் வெளியான செய்திகளினால் எம்மைப் போன்ற பல தமிழ் ஆசிரிய உள்ளங்கள் விடிவு கிடைக்கப் பெறாமல் தவிப்பதை உணரக் கூடியதாக இருந்தது. பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயின்ற ஆசிரியர்களின் நிலையை மட்டும் நீங்கள் வெளியிட்டிருந்தீர்கள்.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயின்று இன்றும் பரீட்சை முடிவுபெறாமல் துயருறும் மாணவர்களின் நிலையையும் தயவுசெய்து உங்கள் பத்திரிகையில் வெளியிடுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

1983 டிசம்பர் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் அனைவருக்கும் அண்மையில் பரீட்சை முடிவுகள் வெளிவந்துவிட்டது. எனினும் 1983 டிசம்பரில் இறுதிப் பரீட்சை எடுத்த விசேட இந்து சமய நெறியைப் பின்பற்றிய மாணவர்களுக்கு பரீட்சை முடிவு வரவில்லை. இதற்கு யார் காரணம்? இன்றைய நாட்டு நிலையில் மிகக் கஷ்டப்பட்டு உயிரைச் துச்சமாக மதித்து கடமையைச் செய்யும் ஆசிரியர்களின் அவல நிலையை எண்ணி தயவுசெய்து பரீட்சைத் திணைக்களமும், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபரும் கூடிய கவனம் எடுத்து பரீட்சை முடிவைப் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படிக்கு,
பரீட்சை முடிவு
கிடைக்கப்பெறாது தவிக்கும்
விசேட இந்துசமய
நெறி ஆசிரியர்கள்

## அதிபருக்கு ஆசீர்வாதம்

(நல்லூர்)

யாழ்ப்பாணம்பரி.யோவான் கல்லூரியின் அதிபராக திரு. தம்பித்துரை குணசீலன் அவர்களை நிலைப்படுத்தி ஆசீர்வதித்து ஒப்புக் கொடுக்கும் ஆராதனை சுண்டிக்குளி பரி. யோவான் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

இந்த ஆராதனையை கொழும்பு திருமண்டலப் பேராயர் பேரருட்திரு. சுவீதின் பெர்ணண்டோ ஆண்டகை ஒப்புக் கொடுத்து அருளுரை வழங்கி ஆசீர்வாதம் கூறுவார்.

## பொங்கல் தின சிறப்பு நிகழ்ச்சி

தைப்பொங்கல் தினமான 14ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ரூபவாஹினியில் விசேட தைப்பொங்கல் நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. "பட்டிக்காடா பட்டணமா" என்ற தமிழ்ப் திரைப்படமும் ஒளிபரப்பப்படவுள்ளது.

## சாம்பியன்

(அராலி)

அராலி சில்வர் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிநிலை ஆட்டத்தில் சென். மேரிஸ் சனசமூக நிலைய கோஷ்டி, சென். நிக்கலஸ் சனசமூக நிலைய கோஷ்டியை மூன்றுக்கு ஒன்று என்ற கோல்க் கணக்கில் தோற்கடித்து சாம்பியனானது.


அபுதாபி செல்வதற்கு பாஸ்போட் என்னிடம் தந்தவர்களும் புதிதாக செல்ல விரும்புகிறவர்களும் உடனே வந்து சந்திக்கவும்.

**A. மகேந்திரன்**

155, (5) குருசோ வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
R/15290


## திருவாசக முற்றோதல் ஆரம்பம்

(காரைநகர்)

காரைநகர் மணற்காடு அருள்மிகு கும்பநாயகி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் கடந்த புதன்கிழமை காலை திருவாசக முற்றோதல் ஆரம்பமாகியது.

மணற்காடு அன்னை அருள் நெறி மன்றத்தினரின் ஆதரவில் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான ஆதீன முதல்வர் உயர் திரு. துரையப்பா முருகேசு தலைமையில் இத் திருவாசக முற்றோதல் நடைபெற்றது.

## சீருடை கிடைத்தது

(காரைநகர்)

காரைநகர் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர் அனைவருக்கும் புத்தாண்டையொட்டி சுகாதாரத் திணைக்களத்தினரால் சீருடை வழங்கப்பட்டுள்ளது.

## ஆபத்து குறித்து பிரசாரம்

(ஏழாலை)

ஏழாலை உப - அலுவலகப் பகுதியில் அதிக அளவில் சட்ட விரோத மின்னிணைப்புப் பெறுவோரைக் கட்டுப் படுத்தும் நோக்கத்துடன் ஒலிபெருக்கி பொருத்திய வாகனத்தின் மூலமாகச் சட்ட விரோத மின்னிணைப்பின் மூலம் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள்பற்றி பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு வீதி, ஒழுங்கைகளினூடாக இப்பிரசாரம் நடைபெற்று வருகின்றது. துண்டுப்பிரசுரமும் இதுசம்பந்தமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது. உடுவில் உதவி அரசாங்க அதிபரினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட விழிப்புக்குழுவினரின் ஆரம்பசெயற்பாடு இதுவாகும். இப்பிரசாரச் செயற்பாட்டினால் சட்ட விரோதமாக மின்சாரம் பெறுபவர்கள் மின்சாரத் தொடர்பைத் துண்டிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## வருடாந்த இரவு விருந்து

(நல்லூர்)

நல்லூர் பரி. யாக்கோபு ஆலய வாலிபர் சங்கத்தின் வருடாந்த இரவு விருந்து பரி. யாக்கோபு ஆலய ஜெப மண்டபத்தில் யாழ்ப்பாண அர்ச்சுக்கள் அருட்திரு. சாம். டி. ஹோர்சிங்டன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

இரவு விருந்தில் வாலிபர் சங்க அங்கத்தினர் கலந்து கொண்ட விளையாட்டுகளும், பாடல் நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## பிறந்தநாள் வாழ்த்து

✱ சங்கானை சந்திரன் ஜெயமலர் தம்பதியின் மகன் தர்ஷனன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ பூநகரி தனபாலசிங்கம் யோகேஸ்வரி தம்பதியின் மகள் சரோஜினி இன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ காரைநகர் களபூமி அம்பிகைபாகன் இராஜலோஹினி தம்பதியின் மகன் விமலரூபன் இன்று தனது ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ உடுப்பிட்டி துரைசிங்கம் தவமணி தம்பதியின் மகள் தேவகலா இன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்

## மக்கள் மகிழ்ச்சி

(சாவகச்சேரி)

"மட்டுவில் நுணாவில் இணக்க சபை மூலம் பொது மக்களாகிய நாங்கள் எங்கள் நீண்ட காலப் பிணக்குகளைத் தீர்த்துக் கொண்டது மட்டுமல்ல, எங்கள் பொன்னான காலம், பண விரயங்களைத் தடுப்பதோடு, பரஸ்பர அன்பையும், ஒற்றுமையையும் கூட இச்சபை மூலம்வளர்த்துக்கொண்டுள்ளோம்" என்று நுணாவில், மட்டுவில் பகுதி பொது மக்கள் அப்பகுதி இணக்க சபையினால் கூட்டப்பட்ட ஒரு பொதுக் கூட்டத்தில் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். நுணாவில், மட்டுவில் இணக்க சபையின் பொதுக் கூட்டம் தென்மட்டுவிலூர் வேரற்கேணி முருகன் ஆலய முன்றலில் அதன் தலைவர் திரு. எஸ் ரீ. குணரத்தினம் தலைமையில் ஆரம்பமானது.

சபைச் செயலாளர் திரு. எஸ். தங்கராஜா சபை ஆரம்ப முதலான செயற்பாடுகளை தனது அறிக்கை மூலம் வெளியிட்டார்.

அவர் கூறியதாவது:- சபை ஆரம்ப முதல் இற்றை வரை 203 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 193 வழக்குகள் சமாதானமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. இதில் பெருமளவு காணி, குடும்ப, கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகளே சபைக்கு வந்துள்ளன."

தலைவர் திரு.எஸ்.ரீ குணரத்தினம் பேசுகையில் "மக்களின் அபிப்பிராயத்தை இன்று நாம் நேரில் கேட்க முடிந்தமையையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். மக்களின் அபிப்பிராயப்படி இந்த இணக்கசபை பெரிய சாதனையைச் செய்துள்ளதாக எண்ணுகிறோம். தொடர்ந்து இச்சேவையை மகிழ்ச்சியோடு தொடருவோம்" என்றார்.

## பரிசளிப்பு ஒளி விழாக்கள்

(நல்லூர்)

அரியாலை மேற்கு சமூகசேம நலத்திட்டத்தின் ஆதரவில் நடாத்தப்படுவரும் ஓய்வு நாட் பாடசாலைப் பிள்ளைகளுக்கான பரிசளிப்பு விழாவும், ஒளி விழாவும் யாழ். கல்வித் திணைக்கள நிதி உதவியாளர் திரு எஸ். துரைசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

ஓய்வுநாட் பாடசாலைப் பிள்ளைகளால் அபிநயப் பாட்டு, மனனபாட வசனம், தனிப் பாடல்கள், நடனம், "உன்னைக்களப்படுத்தும் இயேசு" என்ற நாடகமும் நடாத்தப் பட்டது. திருமதி தவமணி துரைசிங்கம் பரிசில்கள் வழங்கினார். ஓய்வுநாட் பாடசாலை ஆசிரியை செல்வி இரத்தின பூபதி தாவீது நன்றியுரை நிகழ்த்தினார்.


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**



## துணுக்காய் பகுதி ப.நோ.கூ.சங்கம்

101.7, பொது முகாமையாளர் பதவி 600-40X10-1000

மேற்படி பதவிக்கு கீழே கொடுக்கப்பட்ட தராதரம், தகைமை உள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

கல்வித்தகைமை: (1) 3 ஆண்டுகளுக்குகுறையாத அனுபவமுள்ள கூட்டுறவு ஊழியர் 8வது சம்பளத்திட்டத்தில் உள்ள முகாமைத்துவ/மேற்பார்வை பதவியில் அல்லது 6 ஆண்டுகளுக்கு குறையாத கூட்டுறவு ஊழியர் 9 வது சம்பளப் பதவியில் இருந்தவர்; அல்லது:

(2) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பட்டம் அல்லது அதற்கு சமமான கல்வித் தகைமையும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழிற்துறை ஸ்தாபனத்தால் வழங்கப்பட்ட நிர்வாகத் துறை 2 வருட அனுபவ சான்றிதழ்கள்;

அல்லது

(3) கூட்டுறவு ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ்/க.பொ.த. (உயர்தரம்) சித்தி 3 பாடங்களும் வர்த்தக/தொழில்துறை அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனத்தில் நிர்வாக மட்டத்தில் 4 ஆண்டுகட்கு குறையாத அனுபவம்.

வயது: 23 தொடக்கம் 50 வயது வரை
பிணை: ரொக்கம் 3000/-
உறுதிப்பிணை: 5000/-
சம்பளம்: $\frac{600X1000}{40X10}$

விண்ணப்பங்கள் யாவும் தலைவர், துணுக்காய் பகுதி ப.நோ.கூ. சங்கம், துணுக்காய் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக 25.01.86ம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும், விண்ணப்பத்தின் இடது பக்க மேல் மூலையில் பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் என குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

துணுக்காய் ப.ப.நோ.கூ.சங்கம், தலைவர்
துணுக்காய்.

B/995



**SCIENCE CENTRE**
**KARAVEDDY**

க. பொ. த: (உயர்தர) விஞ்ஞான மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம் 12.1.86 ஞாயிறு காலை 8 மணிக்கு R/15288

### கல்விப்பணிப்பாளர் கருத்து

# தற்போதைய சூழ் நிலையில் ஒளிவிழாக்கள் அவசியமே

(நல்லூர்)

"சமய நிகழ்ச்சிகளை சிறப்பான முறையில் நடாத்திவரும் யாழ் கல்வித்திணைக்கள நலன் புரிச்சங்கத்தின் கலாச்சாரக் குழுவினர் இவ் வருடம் முதன் முதலாக சிறந்த முறையில் ஒளி விழாவை நடத்துவது குறித்து நான் பெரு மகிழ்ச்சி டைகின்றேன். ஒளிவிழா மூலம் மக்களின் உள்ளங்களில் ஒளி பிறந்து ஒருவரை ஒருவர் அன்போடு நேசிக்க இவ்விழா உதவுமென்றும், மதங்களால் மக்களை ஒருபோதும் பிரித்து வைக்க முடியாது என்றும், சகல மதங்களும் மக்கள் எல்லோரையும் ஒன்று படுத்திவைக்க உதவுகிறது."

இவ்வாறு வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை நல்லூர் ஸ்தான சீ. சீ. தமிழ்க்கலவன் பாடசாலையில் யாழ். கல்வித் திணைக்கள நலன் புரிக்கழகத்தினால் நடாத்தப்பட்ட ஒளி விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஒளி விளக்கை ஏற்றி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்வித் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் திரு. கே. சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவை யாழ்ப்பாண ஆர்ச். டீக்கன் அருட்திரு. சாம். டிஹோர் சிங்டன் அடிகளாரும், அருட் திரு, ஜே பீ. ஈ. செல்வராசா அடிகளாரும் ஒளி விளக்கை ஏற்றி ஆரம்பித்து வைத்தனர்.

கல்விப் பணிப்பாளர் தொடர்ந்து பேசுகையில், "தமிழ் மக்கள் தற்பொழுது வாழும் இந்தச் சூழ் நிலையில் மக்களின் மனதை நல்வழிப் படுத்தஇப்படியான ஒளிவிழாக்கள் மிகவும் அவசியமாகின்றன. எமது இளம் சந்ததியினரின் வாழ்வில் ஒளியைக் கொடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு கல்வித்திணைக்களத்தினுடையதாகும்'' என்று குறிப்பிட்டார்.

கலாச்சார செயலாளரும், நிதி உதவியாளருமான திரு. எஸ். துரைசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினர். சகோதரன் திரு. ஏ, வி. ஜெபநாயகம் குழுவினரால் இசையும் இசைச் செய்தியும் வழங்கப்பட்டது. இவ்விழாவில் புனித யூதா ததேயு ஆலயபாடகர் குழுவினரும், நல்லூர் பரிசுத்த யாக்கோபு ஆலய வாலிபர் சங்கத்தினரும் காதுக்கினிய கிறிஸ்தவ பாடல்களைப்பாடினுர்கள். கிறிஸ்துவிற்காக வாலிபர் சங்க உறுப்பினரும், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவியுமான செல்வி அனுஷா நடனம் மூலம் இயேசுவின் பிறப்புச் செய்தியை அறிவித்தார்.

இயேசு பேசுகிறுர் இயக்குநர் சகோதரன் திரு. கே மகேசன் நத்தார் செய்தியை வழங்கினர். அருட்திரு. செல்வராஜா அடிகளார் ஒளிவிழாவின் நற்செய்தியைகூறி ஆசீர்வாத ஜெபத்தை ஏறெடுத்தார். நலன்புரிச் சங்கப் பொதுச் செயலாளர் திரு. இ. வரதராசா நன்றியுரை நிகழ்த்தினுர்.

# சாவகச்சேரி நகரசபை: புதிய பளு இவ்வருடம்இல்லை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் வரவு செலவுத் திட்டத்தில், இந்த ஆண்டு பொதுமக்களுக்கு எந்த விதமான வரிப்பளுவும் சுமத்தப்படவில்லை. சோலைவரி, வாகன வரி, வாடகை விகிதத்தில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு எதுவித மாற்றமும் இல்லை பாரிய மின்சாரப் புனரமைப்பு வேலைகள், மத்திய நூல் நிலைய விஸ்தரிப்பு, வீதி திருத்தம், வடிகாலமைப்பு, கட்டடத் திருத்த வேலைகளுக்கும் விசேடமாக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு உத்தேச வருமானம் 56 இலட்சத்து 89 ஆயிரத்து 380 ரூபா இதில். செலவினம் 56 இலட்சத்து 47 ஆயிரத்து 550 ரூபா மட்டுமே. இதில் பாரிய மின்சார புனரமைப்பு வேலைகள் இடம் பெறவுள்ளன என்றும் சாவகச்சேரி நகரசபை செயலாளர் திரு. ரீ. நவரத்தினராஜா தெரிவித்தார்.

அவர் மேலும், 'சாவகச்சேரி நகரசபையின் இந்த ஆண்டு வேலைத்திட்டங்கள் பற்றிக் கூறுகையில், 'மின்சார புனரமைப்பு வேலைகள் பாரிய முறையில் நடைபெறவுள்ளன. பனை மரத்திலான மின் கம்பங்களை அகற்றி, 'கொங்கிறீட்' தூண்களை, மக்களின் பாதுகாப்பை முன்னிட்டு அமைக்கப்படவுள்ளன இதற்கு மட்டும் 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வீதிகள் திருத்த வேலைகளுக்காக, அரசாங்கம் கொடுத்து உதவும் 3 இலட்சம் ரூபா நிதியைவிட சபையும் 2 இலட்சத்து இருபதினுயிரம் ரூபாவைச் சபையின் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துள்ளது' என்று தெரிவித்தார்.

# கல்வி அதிகாரி பேச்சுக்கு மகாசிவம் தரும் விளக்கம்

''ஆசிரிய இடமாற்றத்தில் சங்கங்கள் தலையிடுவதால் மாணவரே பாதிப்படைவர்'' என்று யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களப் பிரதம கல்வி அதிகாரி இ. சுந்தரலிங்கம் அவர்கள் எமது சங்க ஆதரவில் வயாவிளான் மத்தியமகா வித்தியாலயத்தில்நடைபெற்ற கருத்தரங்கின் நிறைவுவிழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து உரை நிகழ்த்தியதாக வெளிவந்துள்ள செய்தியை இட்டு (1986.01.01 ஈழமுரசு) விளக்கம் தரவேண்டிய கடப்பாடு என்னுடையதாகும்.

1980ஆம் ஆண்டு கஷ்டப் பிரதேசத்தில் சேவையாற்ற வென்று பல ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்தின் அன்றைய கல்விப் பணிப்பாளரால் மாற்றப்பட்டார்கள். இவர்களது இடமாற்றக் கடிதத்தில், இவ்விடமாற்றம் ஈராண்டுகட்கு மட்டுமே எனவும், மீண்டும் இக்கால எல்லையில் அவ்வாசிரியர் தமது முன்னைய பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவார்கள் எனவும் குறிப்பிடப்பட்டது. இவ்வாறு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களில் பலர் ஐந்தாண்டுகளுக்கு மேலாக அதே கஷ்டப் பிரதேசத்திலேயே பணிபுரிகின்றுர்கள். இப்பிரச்சினை கருத்தரங்கிற்குப் புறம்பாக ஆராயப்பட்டது.

பிரதம கல்வி அதிகாரி இப்பிரச்சினை மீது கருத்துத் தெரிவிக்கையில் இடமாற்றம் மாணவர்களது கல்வியைப் பாதிக்காத முறையில் அமைய வேண்டும் என்றும், அதற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் உதவவேண்டும் என்று கோரிக்கை விடுத்ததுடன் ஒரு பாடசாலையில் கற்பிக்கத் தொடங்கி அதே பாடசாலையிலேயே தமது பணியை முடிக்க வேண்டும் என்று எண்ணும் ஆசிரியர்களின் மனோபாவத்தையும் சுட்டிக் காட்டினுர்.

எனது நன்றியுரையில்1976 1978, 1980 ஆம் ஆண்டுக் காலகட்டங்களில் நிபந்தனை அடிப்படையில் கஷ்டப் பிரதேசங்கட்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியாகளின் பிரச்சினையையும் இப்பிரச்சினை மீது கல்வித் திணைக்களம் கொடுத்த வாக்குறுதி மீறப்பட்டசந்தர்ப்பங்களையும் பிரதம கல்வி அதிகாரியின் கவனத்துக்கு முன் வைத்தேன்.

பிரதம கல்வி அதிகாரி ஆசிரியர் தொழிற்சங்கங்களைச் சாடும் பாணியில் உரை நிகழ்த்தியதாகத் தங்கள் செய்தித் தாளில் வெளிவந்த கருத்துத் தவருனதாகும்.

த. மகாசிவம்
செயலாளர்,
இலங்கைத் தமிழர்
ஆசிரியர் சங்கம்

# புற்றுநோய் ஒரு கொடிய பயங்கரவாதி; இதனைக் கட்டுப்படுத்த வாரி வழங்குங்கள்

நல்லமுறையில் திட்டமிட்டு, அழகாகக் கட்டப்பட்டு, திறம்பட செயற்படுவது தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையாகும். இதன் பராமரிப்புப் பற்றியும், நிர்வாகம் பற்றியும், சுத்தம் பற்றியும் நோயாளர் நலன் பேணப்படுவது பற்றியும் யாழ் மாவட்ட அமைச்சர், சுகாதார அமைச்சர் உட்பட போற்றுதார் எவருமில்லை. அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் குடும்பத்தின் நன்கொடையால் கட்டப்பட்ட வடமாநில புற்றுநோய்ச் சிகிச்சை நிலையமும் தெல்லிப்பளையில்தான் அமைந்துள்ளது. சுகாதார அமைச்சு தெல்லிப்பழைக்கென்று உலக சுகாதார ஸ்தாபனம்மூலம் வரவழைத்த புற்றுநோய் நிபுணர் இன்றும் கொழும்பில் தான் தங்கி இருக்கிறுர். வடக்கில் சூழ்நிலை சகஜ நிலைக்கு வந்தவுடன் புற்றுநோய் சிகிச்சை நிலையம் ஆரம்பமாகுமென்று சுகாதார அமைச்சர் எமக்கு உறுதி அளித்துள்ளார். போப் ஆண்டவர் உட்பட உலக மதத் தலைவர்கள் அனைவரும் 1986 ம் ஆண்டை சமாதான ஆண்டாகக் கணிப்பதால், தெல்லிப்பழையில் அடுத்த ஆண்டு முற்பகுதியில் புற்று நோய்சிகிச்சை நிலையம் நிறுவப்படும் என்பது எங்கள் திடமான நம்பிக்கை.

புற்றுநோய் ஒழிப்பு போர் வீரர், யாழ் உதவி சுகாதாரப் பணிப்பாளர், வைத்தியகலாநிதி ஜெகநாதனைத் தலைவராகவும், சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி கிருஷ்ணராஜாவை உபதலைவராகவும் கொண்டு அயராது உழைக்கும் வடமாகாண புற்றுநோயாளர் நலன் புரிச் சங்கம், தெல்லிப்பழையில்புற்றுநோயாளர் விடுதி ஒன்றை அமைக்க முன்வந்துள்ளார்கள். எங்கள் குழுவின் நன் முயற்சியால், ஊரெழு வாசியும், சிவத் தொண்டனும், கொடைவள்ளலுமான உயர் திரு. தம்பிராசா அவர்கள் பல லட்ச ரூபா பெறுமதியுள்ள தனது ஒரு ஏக்கர் நிலத்தைச் சங்கத்திற்கு முழு மனத்துடன் நன்கொடையாக வழங்கியுள்ளார். விடுதிகட்டும் வேலைகள் உடனே ஆரம்பமாக உள்ளது. நன்கொடைகள் வந்து குவிகின்றன. சங்கப் பொருளாளர், சட்டத்தரணி இ. சீவரத்தினம் அவர்கள் நன்கொடைகளை அன்புடன் ஏற்றுக் கொள்ளுகிறுர். எல்லா நன்கொடைகளிலும் இதுவே முதன்மையானது. வரிச்சலுகையும் உண்டு. வாரி வழங்குங்கள்.

சூழ் நிலை காரணமாக அதிகரித்து வரும் மனநோயாளர் சிகிச்சை நிலையமும் தெல்லிப்பழையில் தான் அமைந்துள்ளது. சிகிச்சையின் பின் மனநோயாளர்நலன் காக்கும் -மனநோயாளர் நலன் புரிச் சங்கத்திற்கு, வைத்தியசாலைக்குப் பின்னுல் அமைந்துள்ள 3 ஏக்கர் விவசாய நிலத்தை ஒதுக்க எங்கள் குழு முயற்சித்து வருகிறது.

மனிதனின் கொடிய பயங்கரவாதிகள் புற்று நோய், மனநோய் மட்டுமல்ல. காசநோய் என்ற பயங்கரவாதியை ஒழிக்க காங்கேசன்துறையில் அரச முகாம் அமைந்துள்ளது. சிகிச்சை முடிந்து வெளிவரும் நோயாளர் நலன் காக்கும் யாழ்.சி. என். ஏ. பி. ரி. சங்கத்திற்கும் சமூக சேவை இலாகாவிற்கு எங்கள் குழு வேண்டிய உதவிகளைச் செய்யும்.

எல்லாவித நோயாளர்களும் நலன் பெற, தாங்கள் விரும்பும் ஆங்கில வைத்தியமோ ஆயுர் வேதமோ, சித்த வைத்தியமோ, இயற்கை வைத்தியமோ, யோக சிகிச்சையோ பெறுவதற்கு தெல்லிப்பழையில் அமைந்துள்ள கூட்டுறவு வைத்தியசாலையை ஒரு பல நோக்கு சிகிச்சை நிலையமாக மாற்ற எங்கள் குழு ஆலோசனை வழங்க உள்ளது.

எங்கள் நாடு முழுவதும் சுக நலம் பெற தெவ்லிப்பழை கிராமம் ஒரு முன் மாதிரியாக விளங்க வேண்டுமென்று எங்கள் குழு பிரார்த்திக்கிறது.

இ. சபாரத்தினம், ஜே. பி.
தலைவர்
தெல்லிப்பளை அரசினர்
வைத்தியசாலைக் குழு

# 'மக்களின் நன்மதிப்பை பெற கடமையுணர்வு அவசியம்'

(காரைநகர்)

"தபால் சேவையில் ஈடுபடும் ஊழியர்கள் தமது பொறுப்பை நன்கு உணர்ந்து கடமையுணர்வுடன் பணியாற்ற வேண்டும்.''

இவ்வாறு காரைநகர் தபால் அலுவலகத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் செல்லும் தபாலதிபர்களான திரு. பொ. திருவாதிரை, திரு. பி பேரின்பநாயகம் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தின்போது பதிலுரை நிகழ்த்திய தபாலதிபர் திரு பொ. திருவாதிரை குறிப்பிட்டார்.

காரைநகர் தபால் அலுவலகத்தில், தபால் அதிபர் திரு. பொ. அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில். ''எந்த ஒரு அரசாங்க ஊழியராக இருந்தாலும் மேலதிகாரிகளினதும், பொது மக்களினதும் நன்மதிப்பைப் பெற்றவர்களாக இருக்கவேண்டும். மக்களுடன் தொடர்புடைய தபால் ஊழியர்கள் அனைவரும் கடைமையைச் சரிவரச் செய்வதன்மூலமே பொதுமக்களின் நன்மதிப்பைப் பெறமுடியும்'' என்றுர்.

வலந்தலை உபதபாலதிபர் திரு சி. குமாரவேலு, தபால் ஊழியர் திரு. ச. சண்முகரத்தினம் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

### காரைநகர் - மடத்துக்கரை

# அம்பாள் ஆலயப் பிரச்சினை: இளைஞர் தலையீட்டால் தீர்வு

(காரைநகர்)

கடந்த சில மாதங்களாகக் காரைநகரில் பரபரப்பாகப் பேசப்பட்டு வந்த மடத்துக் கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயப் பிரச்சினை சில இளைஞர்களின் தலையீட்டினுல் பகிரங்க நீதி விசாரணையின் பின்னர் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஐந்து பேரைக் கொண்ட பரிபாலனக் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டு பரிபாலனம் ஒப்படைக்கப்பட்டதோடு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த ஆலய அர்ச்சகர் பிரம்ம ஸ்ரீ சோ. கணேச சர்மா அவர்களே தொடர்ந்தும் பூஜை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பெருந்திரளான பொது மக்கள் கூடியிருந்த கூட்டத்தில் பின்வரும் ஐவரும் பரிபாலன சபை உறுப்பினர்களாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

திரு. ஆ. இரத்தினகோபால் (தலைவர்) திரு மு. தருமலிங்கம் (செயலாளர்) திரு. நா. கந்தையா (நீலிப்பந்தனை) திரு. க. அமிர்தசிங்கம் (களபூமி) திரு. ந. கணேசமூர்த்தி (மொந்திபுலம்) இவ்வாலயத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் எழுந்தருளி விக்கிரகம் காணுமல் போனது தெரிந்ததே.

## இவ் வருட ஓய்வூதிய திகதி

1986 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரையான பன்னிரெண்டு மாதங்களிலும் ஓய்வூதியம் வழங்கப்படும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இத் திகதி விபரங்கள் பின்வருமாறு:

ஜனவரி -9, பெப்ரவரி - 13, மார்ச்-13, ஏப்ரல்-9, மே-15, யூன்-12, யூலை-15, ஆகஸ்ட்-14, செப்ரெம்பர்-11, ஒக்ரோபர்-15, நவம்பர்-13, டிசம்பர்-11.

வெளிவந்து விட்டது!
"விமான ஒளிப்பட விளக்கங்களுக்கான மூலாதாரங்கள்"
ஆசிரியர்
S. T. B. இராஜேஸ்வரன், M.A.
(விரிவுரையாளர் புவியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்)
விலை ரூபா; 25/-
வெளியீடு:
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
R/15279

உதய சிந்தனை

சொல்வன்மைக்கு அவசியம் மனத்தெளிவாகும்.

—பொன்மொழி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 23336

இதய ஒலி

9-1-86 வியாழக்கிழமை (குரோதன) மார்கழி-25

# உயிரற்ற உடலுக்கு பரிசோதனை எதற்கு?

"தமிழர் கூட்டணி சமர்ப்பித்த திட்டம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது; அதனை முற்றாக நிராகரித்து விட்டோம்'' என்று அரசாங்க தரப்பினர் சில நாட்களாக வாய்ப்பாடு வாசித்து வந்தனர்.

சென்ற இடம், வந்த இடமெல்லாம் இதுவேதான் பேச்சாக இருந்தது.

ஆனால் இந்தியாவிலிருந்து கொழும்பு திரும்பிய பாரதத் தூதுவர் மாண்புமிகு டிக்ஸிற், அதி உத்தம ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்து, கூட்டணியின் யோசனைபற்றிய அரசின் கருத்தை பாரத அரசு அறிய நாட்டம் கொண்டுள்ளதாகத் தெரிவித்ததையடுத்து, நிலைமையில் சிறிது மாற்றம் தென்பட்டது.

"கூட்டணியின் யோசனை தீவிரமாகவும், கவனமாகவும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது''என்று முதற்தடவையாக, அதுவும் உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தெரிவித்தவர் அரசாங்கத்தின் அதிகாரபூர்வ தலைவரான ஜனாதிபதி.

உண்மையில் கூட்டணியின் திட்டத்துக்கு என்ன நடந்ததென்று தெரியாவிட்டாலும், ஜனாதிபதியின் கூற்றை அனைவருமே பூரணமாக நம்புகின்றோம்.

ஆனால் ஜனாதிபதி இதனைத் தெரிவித்து இரண்டு மூன்று தினங்களுக்குப்பின்னர், அமைச்சர் அத்துலத் முதலி தெரிவித்த ஒரு விடயம் அனைவருக்கும் அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் கொடுத்தது.

இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள், ராஜதந்திரிகள் மத்தியில் இலங்கைப் பிரச்சினை பற்றி எடுத்துக் கூறுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்து அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கச் செய்தார்.

"தங்கள் தேவை என்னவென்பதை தமிழர் விடுதலைக் கூட்டணியோ, தமிழீழப் போராளிகளின் அமைப்புக்களோ இன்னமும் 'தெளிவாகத்' தெரிவிக்கவில்லை என்பதே அமைச்சர் தெரிவித்த கருத்தாகும்.

'தெளிவாக' என்பதற்கு என்ன அர்த்தம் அமைச்சரின் அகராதியில் இருக்கின்றது என்பதைச் சரியாக நாம் அறிந்திராததால், இதனைப்பற்றித் தெளிவாகக் குறிப்பிட முடியாத நிலையிலிருக்கின்றோம்.

ஆனாலும், தினசரி பத்திரிகைகளைப் படித்துவரும் சாதாரணமானவர்களும், வெளிநாட்டுத் தூதுவர்களும் தமிழர்கள் தேவை என்னவென்பதைத் தெளிவாகப் புரிந்திருப்பார்கள் என நம்ப இடமுண்டு.

அமைச்சரின் "தெளிவற்ற'' பிரச்சினைப் பேச்சுக்குப் பின்னர், நேற்றுமுன்தினம் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி, கூட்டணியின் திட்டம் பற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருவதாக மீண்டும் சொல்லியுள்ளார்.

கூட்டணியின் மாற்றுத் திட்டம் பற்றி மிக நுணுக்கமாகப் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும், இது விடயம் பேசித் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தமது கட்சி எம்.பீக்களிடம் விளக்கியுள்ளார்.

இக் கூட்டத்தில், எந்தவொரு எம்.பீயோ, அமைச்சரோ கூட்டணி சமர்ப்பித்த திட்டத்தில் தமிழரின் பிரச்சினை பற்றித் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை என்று சொல்லாதது குறிப்பிடத்தக்கதாகும்.

கூட்டணியினரின் யோசனை பற்றித் தெரிவித்த ஜனாதிபதி, வடக்கும், கிழக்கும் இணைப்பு என்பதற்கு இடமேயில்லை என வலியுறுத்தியுள்ளார்.

தனக்குத் துணையாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்காவையும் ஜனாதிபதி கொண்டுவந்துள்ளார்.

எதிர்க்கட்சி என்றால் அது அரசாங்கத்தின் சகல திட்டங்களையுமே எதிர்க்குமென்பது ஜனாதிபதிக்குத் தெரியாதா? எனவே எதற்காக எதிர்க்கட்சித் தலைவரை உதவிக்கு இழுக்க வேண்டும்?

வடக்குக், கிழக்கு இணைப்பை அகற்றிவிட்டு கூட்டணியின் யோசனையை அரசு பரிசீலிப்பதானால், உயிரற்ற உடலான, வெறும் சடலத்தைப் பரிசோதனை செய்வதாகவே தோன்றுகின்றது.

இந்தச் சோதனை எந்த நன்மையையும் தராது; காலத்தைத் தான் போக்காட்ட உதவும் என்பதே அனைவரதும் கணிப்பாகும்.

**1974 தமிழாராய்ச்சி மாநாட்டு தியாகிகளின் நினைவுதினம் நாளை வெள்ளிக்கிழமையாகும்**

# தமிழ் பேசும் மக்களை உணர்வு பெறச் செய்த பண்பாட்டுப் படுகொலைகள்

ஒரு பண்பாட்டு நிகழ்ச்சியைத்தானும் வெளித் தலையீடு இல்லாது சுதந்திரமாக ஒழுங்கு செய்யும் உரிமை இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்குக் கிடையாது என்பதைப் பாருக்குப் பறைசாற்றிய ஆண்டு 1974ம் ஆண்டாகும்.

பாரிஸ் நகரில் நடந்தேறிய மூன்றாம் அனைத்துலகத் தமிழராய்ச்சி மாநாட்டில் தானே நான்காவது மாநாட்டை இலங்கையில் யாழ்ப்பாணத்தில் நடாத்துவது என்று முடிவு செய்திருந்து, அங்ஙனம்ஏலவே மேற்கொள்ளப்பட்ட முடிவை நடைமுறைப்படுத்தி நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான ஒழுங்குகளைச்செய்ய வேண்டிய பொறுப்பு அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளை மீது சுமத்தப்பட்டிருந்தது.

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் 1974 தைத் திங்கள் முதல் வாரத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளில் மன்றத்தின் இலங்கைக் கிளை இறங்கிய பொழுதுதான் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாது தடுக்க அப்போது பதவியில் இருந்த முக் கூட்டரசாங்கத்தின் உயர் மட்டத்தில் இருந்து தலையீடுகள் பல செய்யப்பட்டன.

கூட்டுறவுத் துறை அரசின் பூரண கட்டுப்பாட்டின்கீழ் இருந்தமையும், யாழ்ப்பாண மாநகர சபையின் நிர்வாகம், அரசின் ஆதரவாளர் கையில் இருந்தமையாலும் மாநாட்டின் உபயோகத்துக்கு வாடகைக்குத்தானும் வீரசிங்கம் மண்டபம், யாழ். நகர மண்டபம், யாழ். திறந்த வெளியரங்கு மற்றும் அரசாங்கக் கல்லூரிகளது மண்டபங்களை வழங்க அனுமதி மறுக்கப்பட்பட்டது.

அனைத்துலகத் தமிராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையிலேயே மாநாட்டை முன் கூட்டி மேற்கொள்ளப்பட்ட முடிவுக்கு அமைவாக யாழ்ப்பாணத்தில் நடத்துவதா அல்லது தலைநகரான கொழும்பில் நடத்துவதா என்ற புதுப் பிரச்சினையை உண்டு பண்ணி, பூதாகாரமாக வளர்த்து உட்பூசலை ஏற்படுத்தினர், இந்த இழு பறிகளின் மத்தியிலும் முன்னைய தீர்மானத்தின் படி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் தானே நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

மாநாட்டைக் கொழும்பில் நடத்த முன்வந்தால் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தை மாநாட்டின் அழைப்பாளர்களுக்கு இலவசமாக உபயோகிக்கலாமென்று நயமாகவும், எச்சரிப்பாகவும் கூறப்பட்டது.

ஆயினும், மன்றச் செயலாளர் கட்டடக் கலைஞர் வி. எஸ். துரைராசா, பொருளாளர் கோபாலபிள்ளை மகாதேவா, மற்றும் துடிப்புள்ள இளம் உறுப்பினர்கள் புதிதாக மன்றத்தின் இலங்கைக் கிளையினது தலைமைப் பொறுப்பைக் கையேற்ற பேராசிரியர் சு. வித்தியானந்தனுக்கு மாநாட்டு ஒழுங்குகளை மேற்கொள்வதில் கைகொடுத்து உதவினர். அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் தோற்றுனரான அருள்திருத் தந்தை சேவியர் தனிநாயக அடிகளாரின் நல்லாசியும் மாநாட்டு அழைப்பாளர்களுக்குக் கிடைத்தது. மாநாட்டு ஏற்பாடுகள் துரிதகதியில் நடந்தேறின.

இறுதிக் கட்டத்தில் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அயல்நாடுகளில் இருந்து வருகைதரவிருந்த தமிழாய்வாளர்களுக்கு இலங்கைக்கு வர விசா மறுக்கப்பட்டது. தப்பித் தவறி முன்னதாகவே விசாப்பெற்று நாட்டுக்கு வந்திருந்தவர்கள் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து அவர்கள் வந்திருந்த விமானங்களிலேயே அவரவர் நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இவ்விதம் ஒரு பண்பாட்டு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்த அறிஞர்கள் நாடுகடத்தப்பட்ட செயல் சர்வதேச கவனத்தையும், கரிசனையையும் ஈர்த்தது. சம்பந்தப்பட்ட தமிழாய்வாளர்கள் தம்தம் நாடுகளது விமான நிலையங்களிலேயே அவர்களை எதிர்கொண்ட பத்திரிகையாளர்களால் பேட்டி காணப்பட்டனர். பத்திரிகைகள் வானொலிச் செய்திகள் தொலைக்காட்சிகள் யாவும் சர்வதேச ரீதியில் அவர்கள் அளித்த பேட்டிகளுச்கு முக்கியத்துவம் கொடுக்கத் தவறவில்லை. இலங்கைத் தமிழ் மக்களுக்கு அவர்களது மரபுவழித் தாயகத்திலும் தமது பண்பாட்டு நிகழ்ச்சிகளைச் சுதந்திரமாக நடாத்தும் உரிமை மறுக்கப்படும் செய்தி சர்வதேச அரங்கில் காட்டுத் தீயாகப் பரவிற்று.

**த. இன்பரசு**

உலகப் பொது அபிப்பிராயத்துக்கு மாறாக எதிர் நீச்சலடிக்கும் துணிவு இல்லாத நிலையில் நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஆரம்பமாகவிருந்த தினத்துக்கு மூன்று தினங்கள் முன்பாக அம் மாநாட்டை நடத்துவதற்கு மாநாட்டின் அழைப்பாளர்களுக்கு இறுதிநேர அனுமதியை அளித்தது.

ஆரம்பத்தில் மாநாட்டை நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட வீரசிங்கம் மண்டபத்தில் நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் முற்பிதாவான அருள் திருத்தந்தை சேவியர் தனிநாயகம் அடிகளாரால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்க கோலாகலமாக ஆரம்பமாகியது.

யாழ். நகரும் அயல் கிராமங்கள், பட்டினங்கள் யாவும் வெளிநாட்டறிஞர்களை வரவேற்க சோடனைகளால் விழாக்கோலம் பூண்டிருந்தன. யாழ். குடாநாடு பூராவும் அவ்வாறு முன்னெப்பொழுதும் அலங்கரிக்கப்பட்டது கிடையாது.

தமிழாராட்சி மாநாடு வீரசிங்கம் மண்டபத்திலும், சிறிய கருத்தரங்குகள் வேம்படி வீதியிலுள்ள றிம்மர் மண்டபத்திலும் நடைபெற, மாநாட்டையொட்டிய தமிழர் சால்பை விளக்கும் தமிழ்விழா பொருட்காட்சி சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் இந்திர விழாவாக அமைந்திருந்தது. அலங்கார ஊர்திகள் உலா தை 9ம் நாளில் யாழ். நகர் வீதிகளை வலம் வந்தன. யாழ். நகரே இந்திர விழாவாக காட்சி தந்தது.

மாநாட்டில்கலந்துகொண்ட வெளிநாட்டுத் தமிழாய்வாளர்களுக்கு நன்றியுள்ள யாழ்ப்பாண மக்கள் சார்பில் பிரியாவிடை நல்கும் வழியனுப்புவிழா ஒன்று மாநாட்டின் இறுதி நாளான 1974 ஜனவரி 10ம் நாளில் யாழ். திறந்தவெளியரங்கில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

அறியப்படாத காரணங்களின் நிமித்தம் அன்று யாழ். திறந்த வெளியரங்கின் புறக் கதவுகள்- படலைகள் யாவும் பூட்டப்பட்டிருந்ததால், அந்த வைபவத்தையும் யாழ். வீரசிங்கம் மண்டபத்துக்கே இறுதி நேரத்தில் மாற்றிக் கொள்ள மாநாட்டு அமைப்பாளர் நிர்ப்பந்திக்கப்பட்டனர். வழியனுப்பு விழாவைக் காண்பதற்கு கடல்போல் தமிழர் கூட்டம் ஐம்பதினாயிரத்திற்கும் மேலாகத் திரண்டிருந்தது.

அத்தனை பேரையும், மண்டபத்தினுள் உள்ளடக்க வியலாதலால், சடுதியாக திடீர் மேடை ஒன்று மண்டபத்தின் முன்பாக நிறுவப்பட்டது. வெளிநாட்டு நல்லறிஞர் மேடையிலே வீற்றிருக்க, பொதுமக்கள் கோட்டை முத்த வெளிப் பசும் புற்றரையில் அமைதியாக அமர்ந்திருந்து நிகழ்ச்சிகளை அவதானித்துக்கொண்டிருந்தார்கள்.

இரண்டாவது பேச்சாளராக தமிழகத்துப் பேராளர்களுள் ஒருவரான இஸ்லாமியத் தமிழ் ஆய்வாளர் நையினார் முகமது தேன்சொட்டும் ஆற்றொழுக்குத் தமிழில் தமது உரையை ஆரம்பித்தார். அமைதிகாத்து அவரது தமிழின் இனிமையை மாற்றித் திளைத்திருந்த தமிழர் கூட்டத்தின் நடுவேஅழையா விருந்தாளியாகப் புகுந்த பொலிசார் முகாந்திரம் எதுவுமின்றி முன்னெச்சரிக்கைதானும் வழங்காது குண்டாந்தடியடிப் பிரயோகம் செய்து, கண்ணீர்ப் புகைக்குண்டுகளை மாரிபோல் சொரிந்தனர். துப்பாக்கிப் பிரயோகத்தால் மின்சார மூலக்கம்பிகள் அறுந்து விழுந்தன. மூச்சுத் திணறித் திக்கு முக்காடி அல்லோலகல்லோலப்பட்ட மக்கள் திக்குத் திசை அறியாது நலாபுறமும் சிதறி ஓடினர்.

அங்ஙனம் சம்பவித்த போது மிதியுண்டு நசுங்கியும், மின்சாரம் தாக்கியும் பச்சைத் தமிழர் ஒன்பதின்மர் பதைக்கப்

5ம் பக்கம் பார்க்க

## லிபிய அதிபர் கடாபி காட்டுமிராண்டி என றீகன் வர்ணனை

# தலைமை தாங்கிப் பொருதத் தயாராணல் வரவேற்பதாக அறிவிப்பு!

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி திரு. றெனல்ட் றீகன் லிபியாவுக்கு எதிராகப் புதிய பொருளாதாரத் தடைகளை நேற்று விதித்துள்ளார். அமெரிக்காவுக்கு எதிராக ஆயுத ஆக்கிரமிப்பில் சம்பந்தப்பட்டிருக்கும் காட்டுமிராண்டித்தனமான ஒருவரின் தலைமையில் இயங்கும் நாடு என அவர் லிபியாவை வர்ணித்துள்ளார்,

லிபிய அரசாங்கத்துக்கு அமெரிக்கப் பிரஜைகள் கடன் வழங்குவதை திரு. றீகன் தடைசெய்துள்ளார்.

லிபியாவில் வர்த்தகம் மற்றும் நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

லிபியாவிலுள்ள 1500 அமெரிக்கர்களை உடனடியாகத் தாயகம் திரும்புமாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

சுமார் நான்கு மாதங்களுக்குப் பின்னர் அவர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுகையில், 'இந் நடவடிக்கைகள் லிபியாவின் பயங்கரவாதச் செயல்களை நிறுத்தாவிட்டால் மேலும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாக' அவர் கூறினர்.

அமெரிக்காவுக்கு எதிராக பதில் நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக கேர்ணல் கடாபி விடுத்துள்ள அச்சுறுத்தலைத் தான் பாரதூரமானதாக எடுத்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் தானே தலைமை தாங்கி அமெரிக்காவுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தவிரும்பினல் அதனைத் தான் வரவேற்பதாகவும் திரு. றீகன் மேலும் தெரிவித்துள்ளார்.

## விழிப்பு நடவடிக்கையாக இருளில் லிபிய நகரங்கள்

(ட்ரிப்பொலி)

லிபியா மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் திடீர்த் தாக்குதலை நடாத்தலாம் என்ற வதந்தி தற்போது எழுந்துள்ளதால் நேற்றும், முதல் நாளும் லிபிய நகரங்கள் இருளாக்கப்பட்டதுடன் பலத்த பந்தோபஸ்தும் ஏற்படுத்தப்பட்டது.

லிபியா மீது எவரும் தாக்குதல் நடாத்தினல் தாம் பதில் தாக்குதல் கொடுப்போம் என லிபியத் தலைவர் கேர்ணல் கடாபி அறிவித்துள்ளார் என்பது தெரிந்ததே.

## சென்னையில் தடையுத்தரவு

(சென்னை)

சென்னையில் கூட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவதற்குத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தடையுத்தரவு எதிர்வரும் 22ம் திகதி வரை அமுலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## கடந்த வருடம் சிசு ஜனனத்தில் சீனவை இந்தியா மிஞ்சிவிட்டதாக அறிவிப்பு

(சென்னை)

கடந்த வருடம் சீனவை விட பாரதம் பிறப்பு விகிதத்தில் கூடிய இடத்தை வகிக்கிறது. இத்தகவலை சென்னையில் குழாய் மூலமான சிசு சிகிச்சை நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசிய தமிழக சுகாதார அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே தெரிவித்தார்

சீனவில் கடந்த வருடம் ஒரு கோடியே பத்து இலட்சம் பிள்ளைகள் பிறந்தன என்றும் பாரதத்தில் கடந்த வருடம் சிசு ஜனன எண்ணிக்கை இரண்டரைக் கோடி என்றும் அவர் சொன்னர்.

சென்னையில் திறந்து வைக்கப்பட்டுள்ள இச் சிகிச்சை நிலையம் மூலம் விஞ்ஞான ரீதியில், மலட்டுத் தன்மையுள்ள அறுபது முதல் எழுபது சத வீத ஆண்களும், பெண்களும் குழந்தை பெற முடியும் என்றும் அவர் விபரித்தார்.

## குஜராத்: மீண்டும் மூண்ட கலவரம் கட்டுப்பாட்டில்

(குஜராத்)

குஜராத் தலைநகரில் மீண்டும் உண்டான கலவரங்கள் தற்போது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்துக்களும், முஸ்லீம்களும் கலந்து கொண்ட பட்டம் ஏற்றும் விழா ஒன்றில் கலவரம் உண்டானது. சிலர் கொல்லப்பட்டனர், பலர் காயமடைந்தனர்.

இக்கலவரங்களையடுத்து மாநில முதலமைச்சர்பொலிஸ் உயர்மட்ட அதிகாரிகளுடன் அவசர மாநாடு கூட்டிநிலைமை குறித்து ஆராய்ந்தார்.

சில கலவரப் பகுதிகளில் மூன்று நாட்களுக்குத் தொடர்ச்சியாகப் போடப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் மூன்று மணித்தியாலங்களுக்குத் தளர்த்தப்பட்டது.

## பாரத நிதி மந்திரி பாகிஸ்தான் பயணமானர் வர்த்தக, பொருளாதார உறவு ஆராயப்படும்

(புதுடில்லி)

வர்த்தகம் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் குறித்து விரிவாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தும் பொருட்டு பாரத நிதியமைச்சர் திரு. வி. பிரதப்சிங் பாகிஸ்தானுக்கு நேற்றுப் பயணமாகியுள்ளார்.

அவர் அங்கு பாகிஸ்தான் நிதியமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் இது தொடர்பாக ஆலோசிக்கவுள்ளார்.

கடந்த மாதம் புதுடில்லியில் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும், பாகிஸ்தான் ஜனதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக்கும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது மேற்கொள்ளப்பட்டமுடிவின் படியே இப்பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் புதுடில்லி அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பயணத்துக்குப் பாகிஸ்தானில் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இப்பயணமானது பாரத, பாகிஸ்தான் பொருளாதார உறவில புதியதோர் அத்தியாயமாக அமையும் எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க, இரு நாடுகளினதும் வெளியுறவு, பாதுகாப்பு அமைச்சர்களின் செயலர்கள் இம்மாத இறுதியில் சந்திக்கவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### சிரியத் துருப்புகள்

## இஸ்ரேலிய விமானம் மீது ஏவுகணைத் தாக்குதல்!

(டமாஸ்கஸ்)

லெபனனில் நிலை கொண்டுள்ள சிரியத்துருப்புகள் ஏவுகணைகள் மூலம் இஸ்ரேலிய ஜெட் விமானங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

எனினும் இதனல் இஸ்ரேலிய விமானங்கள் சேதமுற்றதாகத் தகவலேதுமில்லை.

### புதுடில்லி மாநாட்டில் பிரதிநிதிகள் விபரிப்பு

## ஆபிரிக்க மக்கள் அரசியலை விட பொருளாதாரத்தில் நாட்டம்

(புதுடில்லி)

புதுடில்லியில் நடைபெறும் காமன்வெல்த நாடுகளின் சபாநாயகர் மாநாட்டில் ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் பேசுகையில், தம் நாடுகளின் ஒரு கட்சி ஆட்சி முறை குறித்து எடுத்துரைத்தனர்.

அங்கு எதிர்க்கட்சிகளே இல்லையென்றும் ஒரு கட்சி ஆட்சியே நீடிப்பதாகவும் அவர்கள் விளக்கினர்.

எதிர்க்கட்சிகள் ஆட்சிமுறை தமக்கு கலாச்சாரத்துக்கு ஒவ்வாதது என அவர்கள் கூறினர்.

தம் இந்நிலைப்பாட்டினை ஸிம்பாப்வே, தன்ஸானியா, கென்யா முதலான நாட்டுப் பிரதிநிதிகள் வெளிப்படுத்தினர்.

அரசியலைவிட பொருளாதார வளர்ச்சிக்கே தமது நாடுகள் அதிக முக்கியத்துவம் அளிப்பதாக அவர்கள் சொன்னர்கள்.

சுதந்திரம் பெற்ற காலத்தில் ஒரு சில எதிர்க்கட்சிகள் தம் நாடுகளில் இருந்ததாகவும், பின்னர் அவை மக்களால் நிராகரிக்கப்பட்டன அல்லது அக்கட்சியாளர்களே நிலைமையைப் புரிந்து கொண்டு அவற்றைக் கலைத்துவிட்டனர் என்று மேற்படிப் பிரதிநிதிகள் மேலும் விபரித்தனர்.

### தமிழ் ....

... 4ஆம் பக்கத் தொடர்

பதைக்க பரிதாபகரமாக மரணமடைய நேர்ந்தது. அனேகர் காயமுற்றனர். நேர்ந்த அவலத்தால் ஆடைகள் நெகிழ பெண்கள் மானபங்கமுற்றனர். இளைஞர்கள் தமது மேற்சட்டைகளைக் களைந்து உதவியதால் அனேக பெண்கள் தமது மானத்தைக் காத்துக்கொள்ள முடிந்தது.

இந்திர விழாக் கோலம் காட்டி நின்ற யாழ்நகர் கணப்பொழுதில் மரண வீடாக மாறிற்று. அந்த 1974 ம் ஆண்டில் முழு யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் எந்தவொரு தமிழன் இல்லத்திலும் பொங்கல் பண்டிகையின்போது பால் பொங்கவில்லை. இளைய தலைமுறையினரின் உள்ளங்கள் தாம் ஏற்பட்ட கொதிப்பால் எரிமலைபோல் குமுறிப் பொங்கின.

இத்தனை நடந்துவிட்ட பிற்பாடும் ஆளவந்தாரிடம் இருந்து ஒரே ஒரு வார்த்தை அனுதாபம்தானும் தெரிவிக்கப்படவில்லை. பொதுவான நீதி விசாரணை வற்புறுத்தப்பட்டபோதும் ஆளவந்தாரால் அக்கோரிக்கை அசட்டை செய்யப்பட்டது.

ஆகவேதான் மாற்றுவழியின்றி. யாழ்ப்பாணப் பொது அலுவல்கள் குழு பொதுமக்கள் விசாரணைக் குழுவொன்றைத் தானே நியமித்தது. அந்நியமனம் இலங்கையின் வரலாற்றில் ஒருமைல் கல்லாக அமைந்தது.

ஓய்வுபெற்ற நீதியரசர்களான கிறெஸ்ரெரையும் (தலைவர்) எஸ். மாணிக்கவாசகரையும் ஆயர் ஏ. குலேந்திரனையும உள்ளடக்கியதான மூவர் கொண்ட அந்த விசாரணைக் குழு தனது அமர்வுகளை சம்பவம் இடம்பெற்ற யாழ்ப்பாணத்தில்தானே பாம்கோட் விடுதியகததில் வைத்துக் கொண்டது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தமிழ்ப்பெருமகன் வேற்பிள்ளை பொது விசாரணைக் குழுவின் செயலாளராகப் பணியாற்றினர். ஓய்வு பெற்ற மாவட்ட நீதியரசர் எஸ். தம்பித்துரை விசாரணைக் குழுவின் முன்பாக சாட்சிகளை நெறிப்படுத்தினர்.

மேற்படி விசாரணைக்குழுவினல் யாழ்ப்பாணப் பொது அலுவல்கள் குழுவின் தலைவரான டாக்டர் பசுபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட விசாரணை அறிகையை "கிறெஸ்ரார் விசாரணைக் குழு அறிக்கை" என அறியப்படும்படியாக அச்சிடப்பட்டு ஓர் ஆவணமாக வெளியிடப்பட்டது.

இதே அறிக்கை பாராளுமன்ற நடவடிக்கைகளது பதிவேடான ஹன்சாட்டிலும் அதன் பின் இணைப்பாக சேர்த்துக் கொள்ளும்படி சாதுரியமாகப் பார்த்துக்கொண்டார் முன்னுள் உடுவில் தொகுதிப் பாராளுமன்றஉறுப்பினர் அமரர் வி. தருமலிங்கம்.

படுகொலை நிகழ்ச்சியான தமிழாராய்ச்சி மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட பண்பாட்டுப் படுகொலைகளின் ஓர் அம்சமாக மரித்துப் போன தமிழ்த் தியாகிகளை நினைவு படுத்தும் வகையில் அவர்களது முதலாண்டு நினைவு தினத்திற்கு முன்னதாக வீரசிங்கம் மண்டபத்திற்கு எதிராக ஒன்பது நினைவுத் தூபிகளைத் துடிப்புள்ள தமிழ் இளைஞர்கள் நிறுவியிருந்தார்கள்.

முதலாண்டு நினைவு தினத்தன்று அப் புனித சின்னங்களின் முன்பாக காலையில் சர்வமதத்தலைவர்களும் கலந்து கொண்ட சர்வமத வழிபாடுகளும் மாலையில் வீரசிங்கம் மண்டபத்தில் தமிழ்த் தியாகிகள் நினைவான அஞ்சலிப் பொதுக்கூட்டமும் நடாத்தப்பட்டன.

பொறாமைகொண்டோரால் சிறிது காலத்திற்குள் அந்த நினைவுச் சின்னங்கள் களவாகப் பிடுங்கி அப்புறப்படுத்தப்பட்டன.

பொங்கி எழுந்த இளைய தலைமுறையினர் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்துக்கு முந்திய இரவில் எளிதில் உடைக்க முடியாதபடி பாரிய நினைவுத் தூண் ஒன்றினை வலுவூட்டப்பட்ட சீமெந்துக்கொங்கிறீற்றல் நிர்மாணித்தனர். முதலாண்டு நினைவுத் தினத்தைப் போன்று இரண்டாம் நினைவு தினத்தன்றும் பண்பாட்டுப் படுகொலைக்குள்ளாகிய தியாகிகள் நினைவாக அப் புனித சின்னத்தின் முன்பாக சர்வமத வழிபாடுகள் நடைபெற வழி கோரினர்.

திரும்பவும் ஒரு நள்ளிரவில் அப் புண்ணிய பூமி பாதுகாப்புப் படையினரால் சூழ்ந்து கொள்ளப்பட்டு, கனரக வாகனங்களில் இணைக்கப்பட்ட இரும்புச் சங்கிலிகளால் அந் நினைவுத் தூண் கட்டி இழுத்து முறித்து மூன்று துண்டங்களாக வீழ்த்தப்பட்டது.

உல்லாசப் பயணிகளின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு பழைய காலனி ஆட்சியாளர்களின் எச்ச சொச்சமான பழைய ஒல்லாந்தர் கோட்டையைப் புதை பொருள் திணைக்களம் பேணி வருவது போன்று, பண்பாட்டுப் படுகொலையின் சிதைவுகளாகத் தகர்க்கப்பட்ட தியாகிகள் நினைவுச் சின்னத்தின் மூன்று துண்டங்களையும் பாதுகாப்பாக அப்படியே விட்டு, சிறிய அளிவிலான ஒன்பது தூண்களைப் புதிதாக பிறை வடிவ வட்டத்தில் அதனைச் சூழ நிர்மாணித்தனர் சோர்ந்து போகாத தமிழ் இளைஞர்.

ஈழமுரசு

## மட்டக்களப்பு - கல்முனைப் பாதை போக்குவரத்து துண்டிப்பு!

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாகப் பெய்த கடும் மழை காரணமாக மட்டக்களப்புக்கும் கல்முனைக்குமிடையிலான போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. கல்லாறுப் பாலத்தை மேவி வெள்ளம் பாய்வதால் கிழக்குப்பிராந்தியப் போக்குவரத்து பஸ் சேவைகளும் இப்பாதை வழியாக ஓடமுடியாத நிலை ஏற்பட்டது. தாழ்ந்த பிரதேச மக்கள் வெள்ள அபாயத்தால் ஆலயங்கள், பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இப்பகுதி மீனவர்களை கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவேண்டாமென்று வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

பிராந்திய முகாமையாளர் தகவல்:

# நகைகளை மீளளிக்க பாதுகாப்புக் காரணமாக மக்கள் வங்கித் தலைமைப்பீடமே பின்னிற்கிறது!

(இ. பாரதி)

வடபகுதி மக்கள் வங்கிக் கிளைகளில் நகை அடகு வைத்தவர்களது நகைகளை மீளளிப்பதற்காக தான் தன்னாலான சகல முயற்சிகளையும் செய்துள்ளதாகவும் பாதுகாப்புக் காரணங்களாலேயே இவற்றை உடனடியாக ஒப்படைக்க வங்கியின் தலைமைப்பீடம் பின்னிற்பதாகவும் மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் திரு. எம். கணேசசுந்தரம் 'ஈழமுரசு'க்கு நேற்றுத் தெரிவித்தார்.

நாளாந்தம் நூறு நகைகள் வீதம் பலாலி இராணுவ முகாமிற்கு அருகில் வைத்து வழங்கப்படவிருந்த மக்கள் வங்கித் தலைமைப் பீடத்தின் திட்டம் வடபிராந்திய முகாமையாளரினால் நிராகரிக்கப்பட்டு விட்டது என்று அடகு வைத்தோர் சங்கம் கூறியிருப்பது உண்மைக்கு முற்றிலும் புறம்பானதாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

தான் பல தடவைகள் பேராசிரியர் சிவத்தம்பியைச் சந்தித்து நகைகளைத் திருப்பிக் கொடுப்பதற்கு கண்காணிப்புக் குழுவின் உதவியுடன் ஆவன செய்து தருமாறு வேண்டியிருந்ததாகவும், பேராசிரியர் கொழும்பிலுள்ள அலுவலகத்துடன் நேரில் தொடர்பு கொண்டு மேற்படி திட்டத்துடன் யாழ்ப்பாணம்வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இத் திட்டத்தை தாம் ஏற்றுக்கொண்டு அடகு வைத்தோர் சங்கத்துடன் கலந்தாலோசித்து தமது சம்மதத்தை அதே நாளில் தலைமைக் காரியாலயத்திற்கு தெரிவித்ததாகவும், தமது கடிதத்திற்கு தலைமைக் காரியாலயத்திலிருந்து எவ்வித பதிலும் வராத காரணத்தால் தாமே சென்ற வாரம் கொழும்புக்குச் சென்று வங்கி உயர் அதிகாரிகளுடனும், மாவட்ட அமைச்சருடனும் தொடர்புகொண்டு சங்கத்தின் நிலைமையை எடுத்துக் கூறி, பொதுமுகாமையாளர் தந்த உறுதிமொழியுடன் திரும்பியதாகவும் அவர் தெரிவித்தார்.

தமது முயற்சிகள் அனைத்தையும் சங்கத் தலைவர் அறிந்திருந்தும், வடபிராந்திய முகாமையாளர் மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக்கூறுவது தமக்கு வேதனையளிப்பதாகவும் அவர் கூறினார்.

இப்பொழுது தினமும் அறுபது நகைகள் வீதமே பலாலி இராணுவ முகாமிற்கு அருகாமையில வைதது வழங்கப்படுகிறது. சுமார் பத்தாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் நகைகளைப் பெறுவதற்காகப் பணம் கட்டியிருப்பதால் இதே வேகத்தில் நகைகள் வழங்கப்பட்டால் முழு நகைகளும் வழங்கி முடிய ஒரு வருடத்திற்கு மேல் செல்லும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

'இந்து' பேட்டியில் துணைவேந்தர் வித்தி:

## யாழ். நகரில் உக்கிர போர் நடக்கிறது; எனினும் பல்கலைகழக கல்வி பாதிப்பில்லை!

(புதுடில்லி)

பல்கலைக்கழகத்தைச் சூழ எவ்வளவு உக்கிரமாகப் போர் நடந்து கொண்டு இருந்தாலும், யாழ்ப்பாணப் பலகலைக் கழகம் சமாதானமும் சாந்தியும அரசோச்சும் ஒரு இடமாகவே திகழ்கிறது. என்றோ எப்பொழுதோ நிகழும் ஓரிரண்டு ஹர்த்தாலைத தவிர, அங்கு கல்வி நெறிகளில இடையீடு எதுவும் நேர்ந்தது என்பதற்கில்லை.' இவ்வாறு 'இந்து' பத்திரிகைககு புதுடெலலியில் வைதது அளிதத பேட்டியொன்றில் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர், பேராசிரியர் சு. வித்தியானந்தன் திருப்தி தெரிவித்தார்.

'யூனெஸ்கோ பின்னேக்கும் முன்னேக்கும்' எனும் விடயம் பற்றிய கருத்தரங்கு ஒன்றில் பங்கு பற்றுவதற்காக புதுடில்லி சென்ற துணைவேந்தர் தொடர்ந்தும்கருத்துத் தெரிவிக்கையில் அங்குள்ள மொத்தம் இரண்டாயிரத்து அறுநூறு மாணவரும் ஏதோ ஒரு தமிழ் அரசியல் குழுவின் ஆர்வமிக்க ஆதரவாளராக இருக்கின்றனர் எனவும் சொன்னார்.

பல்கலைக்கழகம் சாந்தம் தவழும் ஓரிடமாக தோன்றுதற்குக் காரணம், பொலிசாரையோ, பந்தோபஸ்துப் படையினரையோ, எதிர்கொள்ளப் 'பொடியன்' நன்கு தயாராக இருப்பதே எனப் பேராசிரியர் கருத்துத் தெரிவித்தார்.

மிக அதிகமாகத் தமிழரே அங்கு சனததொகையினராக உள்ளமையால், குறிப்பிடும் அளவு நீண்ட நேரத்திற்குப் படையினர் நடமாடுவதில்லை எனவும் அவர் சொன்னார்.

ஆனால் இலங்கைத் தீவின் கிழக்கில் நிலைமை படுமோசமாக உள்ளது. இராணுவத்தினரின் 'தேடு – அழி' நடவடிக்கைகளுக்குப் பெரும் இலக்காவது மட்டக்களப்பு பல்கலைக் கழககல்லூரியாகும் என பேராசிரியர் கவலை தெரிவிததார்.

சிங்களப் போதனைககு ஏற்பாடு உள்ளதாயினும் அங்கு அது கற்பிக்கப்படுவதில்லை. வளாகத்தின் ஒரேயொரு சிங்கள ஆசிரியர் 1977ஆம் ஆண்டு கலவரங்களை அடுத்து அங்கிருந்து ஓடிவிட்டார் என்றார் பேராசிரியர்.

### பார்த்தசாரதி....

தம் தன்னாலான நடவடிக்கையெடுக்குமெனத் தாம் நம்புவதாக அமைச்சர் பின்னர் தெரிவித்தார்.

"இலங்கை அரசாங்கம் இவ் விடயத்தல் என்ன நடவடிக்கை எடுக்குமென்று" கேட்டதற்கு "இதற்குக் கருததுத் தெரிவிப்பது சிரமம்" என்று அமைசசர் தெரிவித்தார்.

### யாழ் மாவட்ட....

காவாக பிரிகேடியர் ரூபசிங்ஹா பதவியேற்றுள்ளார். ஏற்கனவே இங்கு கடமையாற்றிய பிரிகேடியர் எச். வனசிங்கா கொழும்பிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

### ராணுவம்....

மிருந்து வரவழைக்கப்பட்ட கூலிப்படையினர் அனைவரையும் வெளியேற்றப்படும வரை ஏற்றுமதித் தேயிலையில் நஞ்சு கலககப்படுமென்றும் தெரிவிக்கப்பட்ட இவர்களின் கடிதம் கொழும்பிலுள்ள சகல தூதரகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுளளது.

முதலாண்டு நினைவு

## பண்டிதருக்கு அஞ்சலி

(வல்வெட்டித்துறை)

சென்ற வருடம் ஜனவரி 9ல் இராணுவத்தினர் அச்சுவேலியில் தீவிரவாதிகளின் முகாமை முற்றுகையிட்ட பொழுது, அவர்களை எதிர்த்து நின்று போராடிய சமரில் வீர மரணமடைந்த கம்பர்மலையை பிறப்பிடமாகக் கொண்ட சி. ரவீந்திரனின் (பண்டிதர், இளங்கோ) ஓராண்டு நினைவையொட்டி அஞ்சலி செலுத்துமுகமாக "வல்வை அன்னையர் முன்னணி" பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளது.

அப் பிரசுரத்தில் அன்றொரு நாள் வல்வை கடற்கரை மைதானத்தில் நடந்த கூட்டத்தில் தமிழினம் பற்றியும், தமிழனின் தாயகம் பற்றியும் சிந்திததன் விளைவு உடலை உறுதிப் படுத்தித் தலைவர்களுக்கு இரத்தத் திலகமிட்ட இளைஞர் குழுவில முதன்மையானவன் ரவீந்திரன். கம்பர்மலையிற் பிறந்ததனாற் பண்டிதனைபோற்றுவார் யாருமில்லை; ஆனால் பண்டிதன் பிறந்த கிராமமானதால் கம்பர்மலை புகழ் பெற்றுவிட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தேயிலை ஏற்று....

டேகு ஜெயவக்கிரம நாளை காலை இவ்விவகாரம் தொடர்பாக கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்துப்பேசவுள்ளார்.

## மழை, மண்சரிவுகளினால் 34 மரணம்; 10,000 அகதிகள்

நாட்டின் கிழக்குப் பகுதியிலும் மலையகத்திலும் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் மழையினாலும் வெள்ளத்தாலும் முப்பத்துநான்கு பேர் மரணமடைந்துள்ளதாக ராஜாங்க அமைச்சர் டாக்டர் ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் தெரிவித்தார்.

இதனால் 10,000 குடும்பங்கள் பாதிககப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட அமைச்சர் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண வேலைகள் மேற்கொள்ளப் பட்டுவருவதாகவும் தெரிவித்தார்.

பொலநறுவ மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டுசெல்வதற்காக வள்ளங்களும் பாவிக்கப்பட்டன. இங்கு பல இடங்கள் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கிறது.

## ஏஜென்ஸியை ஏமாற்றியவர்கள் மன்னார்கடலில் பிடிபட்டனர்

கடந்த வாரம் தலைமன்னார் கடலில் வைத்து கைது செய்யப்பட்ட பதினேழு பேரில் பெரும்பாலானவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக ஏஜென்ஸிக்காரர்களால் அழைத்துச் செல்லப்பட்டு இந்தியாவில் கைவிடப்பட்டவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இவர்களுடன் சேர்த்து சுமார் எண்பது பேர் வெளிநாட்டு ஏஜென்ஸி ஒன்றின் மூலம் சவூதி அரேபியாவில் வேலை வாய்பபுப் பெறுவதற்காக அழைத்துச் செல்லப்பட்டு புதுடில்லியில் கைவிடப்பட்ட பின்னர் ஏஜென்ஸிக்காரர் தலைமறைவாகிவிட்டாராம்.

பின்னர் இவ் இளைஞர்கள் தமிழகம் வநது அங்கிருந்து வள்ளம் ஒன்றின் மூலம் தாயகம் திரும்பிக் கொண்டிருந்ததாகவும் இவர்களில் சிலரை மன்னாரில் இறக்கிவிட்ட பின்னர் யாழ்ப்பாணம் வரும் வழியில் கடற்படையினரால் கைதானதாகவும் தெரிய வருகிறது.

மன்னாரில் இறங்கிய இளைஞர்கள் மூலமாகவே ஏனைய இளைஞர்கள் கைது செய்யப்பட்ட விபரம் அவர்களது பெற்றோருக்கு இப்பொழுது தெரிய வந்துள்ளது. பெற்றோர்களில் சிலர் யாழ். அரசாங்க அதிபரிடமும் இது பற்றி முறையிட்டுள்ளனர்.

### இஸ்ரேலிலிருந்து...

காப்புப் படையினரும் சிகிச்சை முடிவடைந்து கொழும்பு திரும்பியுள்ளார்கள். வடக்கு, கிழக்கு பகுதிகளில் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது காயமடைநத இவர்களுக்கு செயற்கை உறுப்புகள் பொருத்தப்பட்டுள்ளன.

நாடு திரும்பிய இவர்கள் ஜனாதிபதி ஜெயவர்த்தனவையும் அவரது அலுவலகத்தில் சந்தித்தார்கள்.

### மூளைக்காய்ச்சல்...

வாரம் ஒன்பது குழந்தைகள் மூளைக்காச்சல் நோய் காரணமாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறறுவருகின்றனர்.

அவர்களின் விபரம்:- சசிகுமார் (2) மட்டுவில், அமிர்தரூஜ் (6) புங்குடுதீவு, பிலிசியா (5) கிளிநொச்சி, ஜாமினி (2) மல்லாவி, கவிதா (5) கிளிநொச்சி, சந்திரமோகன் (10) முல்லைத்தீவு, செநதூரன் (5) சாவகச்சேரி, கமலேஸ்வரி (6) துணுக்காய், பாஸ்கரன் (3) வவுனியா.

### ஐ. ஜி. பி...

னம் முதற்தடவையாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார். இங்குள்ள பொலிஸ் அதிகாரிகளுடனும், மற்றைய பாதுகாப்பு அதிகாரிகளுடனும் முககியமான பேச்சுக்களை இவர் நடத்தினார்.

## வல்வையில் வயிற்றோட்டம்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சுற்றுப் புறப் பகுதிகளில் வயிறறோட்ட நோய் பரவியுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட பல நோயாளிகள் வல்வை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படடு சிகிச்சையளிககப்படுகின்றனர். கூடுதலாக வயது வந்தவர்களே இவ் வயற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள.

## மின் உபகரணங்கள் கொள்ளை

நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில உள்ள இல்லமொன்றிலிருந்து பெருந்தொகையான மின் உபகரணங்கள் ஆயுத முனையில் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 5ஆம் திகதி இரவு மேற்படி வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சின்னையா நடராசா என்பவரின் இல்லத்திற்கு வாகனமொன்றில் வந்த சிலர் அங்கிருந்தவர்களை மிரட்டிவிட்டு எழுபத்தொன்றாயிரத்து நூறறியிருபத்தைந்து ரூபா பெறுமதியான மின் உபகரணங்களை எடுத்துச் சென்றுள்ளனர்.

### வல்வைக்கு....

பட்டு இராணுவ முகாம்களில் தடுத்து வைககப்பட்டுள்ள இளைஞர்களின் நிலை பற்றியும் விவாதிக்கப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இளைஞர்கள் பலர் நீண்ட நாட்களாக பலாலியிலும், மற்றும் இராணுவ முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணததிலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 09-01-86 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336